Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.16/2025

Deposition of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : மகேஷ் | Village | : |
| Father's / Husband's Name | : ஜெயராமன் | Calling | : |
| Age | : | Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 26th day of February 2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது நெ.41, ரவீந்தர் நகர், முருகப்பா பாலிடெக்னிக், ஆவடியில் வசிக்கின்றேன். மெக்கானிக் செட் வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்துபோனவர் பெயர் குணசேகரன். அவர் துணிக்கடை வைத்திருக்கின்றார். என்னுடைய கடையிலிருந்து 3 வது கடையில் துணிக்கடை வைத்திருக்கின்றார். அந்த இடம் அவரது மாமனாருடையது. கடந்த 27.05.2024 அன்று சாயந்தரம் 5, 5.30 மணியிருக்கும். குணா அடிபட்டு கீழே விழுந்திருந்ததை நான் பார்த்தேன். அப்பொழுது கணேசன் என்பவர் நின்று கொண்டிருந்தார். போலிஸ் வந்து விசாரித்தார்கள். பார்த்திங்களா என்று கேட்டார்கள் நான் இப்ப தான் கடைக்கு போயிட்டு வந்தேன் என்று சொன்னேன். அந்த இடத்தில் குணவோட மனைவி மற்றும் அவரது சொந்த பந்தங்கள் எல்லாம் இருந்தாங்க. போலிஸ் என்னை விசாரித்துக் கொண்டார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 1997 ல் இருந்து கடை வைத்து வருகிறேன். ஆஜர் எதிரி புத்தி சுவாதீனம் இல்லாதவர். அவர் தனியாக பேசிக்கொண்டு செல்வார். சம்பவ இடத்திற்கு 5.30 மணிக்கு வந்தேன். நான் வரும்பொழுது குணா குப்புற படுத்துகிடந்தார்.

போலிசார் அந்த பிரேதத்தை அப்புற படுத்தும்வரை அங்கு தான் இருந்தேன் என்றால் சரியல்ல. என்னை முன்னாடி போங்க என்று சொல்லிவிட்டார்கள். நான் கடைக்கு வந்துவிட்டேன். அதன்பிறகு அங்கு போகவில்லை. போலிசாரிடம் கையெழுத்து போட்டேனா இல்லையா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**